செ.வெ.எண்:18/ஏப்ரல் நாள்:15.04.2016

**இராமநாதபுரம் மாவட்ட கருவூலம் மற்றும் சார்நிலைக் கருவூலங்களில் ஓய்வூதியம் பெறும் ஆதார் அடையாள அட்டை இல்லாத ஓய்வூதியர்கள் சம்மந்தப்பட்ட கருவூலத்தை அணுகி ஆதார் அடையாள அட்டை 20.04.2016 முதல் 22.04.2016 வரை நடைபெறும் முகாமில் கலந்துகொள்ளலாம்.**

**மாவட்ட ஆட்சியர் முனைவர்.ச.நடராஜன் இ.ஆ.ப., அவர்கள் தகவல்.**

இராமநாதபுரம் மாவட்டக் கருவூலம் மற்றும் சார்நிலைக் கருவூலங்களில் ஓய்வூதியம் பெறும் ஓய்வூதியர்கள் சம்பந்தப்பட்ட கருவூலங்களில் 2016-ஆம் ஆண்டிற்கான வருடாந்திர நேர்காணல் ஏப்ரல்—1ஆம் தேதி முதல் நடைபெற்று வருகிறது. நேர்காணலில் ஓய்வூதியதாரர்களின் ஆதார் அடையாள அட்டை நகல், குடும்ப அட்டை எண் மற்றும் வருமானவரி கணக்கு எண் (PAN) ஆகியவைகளின் நகல் பெறப்பட்டு மின் ஓய்வூதிய மென்பொருளில் (e-pension) தினந்தோறும் பதியப்பட்டு வருகிறது.

ஓய்வூதியதாரர்களின் நலன் கருதி இதுவரையிலும் ஆதார் அடையாள அட்டை புகைப்படம், கைரேகை, கருவிழி பதிவு எடுக்கப்பெறாத ஓய்வூதியதாரர்களுக்கு வருகிற 20.04.2016 முதல் 22.04.2016 வரையிலும் சம்பந்தப்பட்ட மாவட்டக் கருவூலம் மற்றும் சார்நிலைக் கருவூலங்களில் புகைப்படம் எடுக்கும் சிறப்பு முகாம் நடைபெறவுள்ளது. எனவே ஓய்வூதியதாரர்கள் தங்களுடைய குடும்ப அட்டை நகலினை கருவூலங்களில் சமர்பித்து இச்சிறப்பு முகாமை பயன்படுத்திக் கொள்ளுமாறு இராமநாதபுரம் மாவட்ட ஆட்சியர் முனைவர் ச.நடராஜன் இ.ஆ.ப., அவர்கள் கேட்டுக்கொள்கிறார்.

வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், இராமநாதபுரம்.